www.freetnbooks.com

# முழு ஆண்டுப் பொதுத்தேர்வு - 2024

8 - ஆம் வகுப்பு

அறிவியல்

நேரம் : 2.30 மணி

மதிப்பெண்கள் :100

**I சரியான விடையைத் தேர்ந்தெடு.** 10 X 1= 10

1. மின்னோட்டம் என்பது .................... அளவு ஆகும்.
   அ) அடிப்படை ஆ) துணை நிலை இ) வழி ஈ) தொழில் சார்ந்த
2. முதன்மைக் குவியத்திற்கும், ஆடி மையத்திற்கும் இடையே உள்ள தொலைவு ....................
   அ) வளைவு நீளம் ஆ) குவிய தொலைவு இ) முதன்மை அச்சு. ஈ) இவற்றில் எதுவுமில்லை
3. பொருந்தாத ஒன்றைக் கண்டுபிடி
   அ) ஹார்மோனியம் ஆ) புல்லாங்குழல் இ) நாதஸ்வரம் ஈ) வயலின்
4. பின்வருவனவற்றுள் காந்தத்தால் கவரப்படும் பொருள் ....................
   அ) மரப்பொருள்கள் ஆ) ஏதேனும் ஓர் உலகம் இ) தாமிரம் ஈ) இரும்பு மற்றும் எஃகு
5. மின்சாரத்தை கடத்தும் அலோகம்
   அ) கார்பன் ஆ) ஆக்சிஜன் இ) அலுமினியம் ஈ) சல்பர்
6. அசோட் எனப்படுவது எது?
   அ) ஆக்சிஜன் ஆ) நைட்ரஜன் இ) சல்பர் ஈ) கார்பன்டை ஆக்சைடு
7. கீழே கொடுக்கப்பட்டுள்ள வற்றுள் எது நீரை மாசுபடுத்தும்?
   அ) ஈயம் ஆ) படிகாரம் இ) ஆக்சிஜன் ஈ) குளோரின்
8. .................. என்பது உயர்தரமான நிலக்கரி வகையாகும்.
   அ) பீட் ஆ) லிக்னைட் இ) பிட்டுமினஸ் ஈ) ஆந்த்ரசைட்
9. முதலாவது நிலத்தாவரங்கள்
   அ) பிரையோஃபைட்டுகள் ஆ) டெரிடோஃபைட்டுகள்
   இ) ஜிம்னோஸ்பெர்ம்கள் ஈ) ஆஞ்சியோஸ்பெர்ம்கள்
10. கரப்பான் பூச்சி எதன் உதவியுடன் நகர்கிறது?
    அ) கால் ஆ) எலும்பு இ) தசைக்கால் ஈ) முழு உடல்

**II கோடிட்ட இடத்தை நிரப்புக.** 10 X 1 = 10

11. நீரியல் உயர்த்தி .................. விதியை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது.
12. ஒரு அமைப்பிற்கு வெப்ப ஆற்றலை அளிக்கும் போது அதன் வெப்பநிலை ............
13. சூரியன் .............. விண்மீன் திரளைச் சார்ந்தது.
14. ............ என்பது ஒரு தனிமத்தின் மிகச்சிறிய துகள்.
15. `புளிப்புச் சுவை' என்பது இலத்தீன் மொழியில் ........... என்ற சொல்லால் வழாங்கப்படுகிறது.
16. படிம எரிபொருளுக்கு ஒரு உதாரணம் ..............
17. ............ என்பது உயிரினங்களின் அமைப்பு மற்றும் செயலி அலகு ஆகும்.
18. ஆண் மற்றும் பெண் இனச் செல்கள் இணைந்து .............. ஐ உருவாக்குகின்றன.
19. விரும்பாத இடத்தில் வளரும் தாவரத்தின் பெயர் ....................
20. ............... நாள் உலக வனவிலங்கு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

**III பொருத்துக.** 5 X 1 = 5

K. SIVANANDHA, M.A.,B.Ed., BT. ASST [SOCIAL SCIENCE], GOVT. HIGH. SCHOOL, SANDANAPALLI, KELAMANGALAM (BLOCK), KRISHNAGIRI (DT).

21. ஆக்டேன் மதிப்பீடு - டீசல்
22. சீட்டேன் மதிப்பீடு - மீத்தேன்
23. எளிய ஹைட்ரோகார்பன் - பெட்ரோல்
24. பீட் - பழுப்பு
25. லிக்னைட் - முதல் நிலை நிலக்கரி

**IV சரியா? அல்லது தவறா? என கூறுக. தவறான கூற்றை திருத்தி எழுதுக.** 5 X 1 = 5

26. குவார்ட்ஸ் கடிகாரங்கள் GPS கருவிகளில் பயன்படுகின்றன.
27. சந்திராயன் -1 ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.
28. அமிலங்கள் அரிக்கும் தன்மையைக் கொண்டவை.
29. கருப்பையிலிருந்து அண்டம் வெளியேறுதல் அண்டம் விடுபடுதல் என அழைக்கப்படுகிறது.
30. மனித உடலில் 12 ஜோடி விலா எலும்புகள் உள்ளன.



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

**V ஏதேனும் 15 வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 15 X 2 = 30

31. வெப்பநிலையை அளவிடப் பயன்படும் அலகுகளைக் கூறுக.
32. வெப்ப ஆற்றலின் விளைவுகள் யாவை?
33. காந்தப்புலம் - வரையறு.
34. நாசாவில் பணியாற்றிய சில இந்தியர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
35. வினைவேக மாற்றம் என்பதை வரையறு.
36. ஆனோடு கதிர்களின் பண்புகளை எழுதுக.
37. நிறங்காட்டி என்றால் என்ன?
38. CNG என்பதை விரிவுபடுத்தி எழுதுக. அதன் இரு பயன்களை எழுதுக.
39. இருவிதையிலைத் தாவரங்களின் இரு பண்புகளை எழுதுக.
40. தசைநார் என்றால் என்ன?
41. கருவுறுதல் என்றால் என்ன?
42. விதைத்தலின் வகைகளைப் பட்டியலிடுக.
43. அழியும் தருவாயில் உள்ள இனங்கள் என்றால் என்ன? இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
44. MAX ( ), MIN ( ) சார்புகளின் பயன்கள் யாவை?
45. **கோடிட்ட இடத்தை நிரப்புக.**
    1) கண் மருத்துவர் கண்களைப் பரிசோதிக்கப் பயன்டுத்தும் ஆடி .....................
    2) ஒளிக்கதிர் ஒன்றின் படுகோணத்தின் மதிப்பு $45^0$ எனில், எதிரொளிப்புக் கோணத்தின் மதிப்பு .............
46. **சரியா, தவறா என குறிப்பிடுக.**
    1) தூண்டல் முறையில் மின்னேற்றம் செய்யப் பயன்படும் ஒரு கருவி நிலைமின்காட்டி.
    2) பக்க இணைப்பில் அனைத்துக் கூறுகளிலும் மின்னோட்டம் மாறிலியாக இருக்கும்.
47. **பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1) இரும்பு | - | மின்கம்பிகள் தயாரிக்க |
| 2) தாமிரம் | - | தையல் ஊசி தயாரிக்க |
| 3) டங்ஸ்டன் | - | இராக்கெட் எரிபொருள் பற்ற வைப்பவை |
| 4) போரான் | - | மின்விளக்கிற்கான இழைகள் செய்ய |

48. **ஒப்பிட்டு விடை தருக.**
    நூலில் போடப்பட்டுள்ள முடிச்சு .................. உராய்வு.
    பந்து தாங்கிகள் ................. உராய்வு.
49. ஒலி மாசுபாட்டின் விளைவுகள் யாவை?
50. வெவ்வேறு வகையான திசுக்களை வகைப்படுத்துக.

**VI ஏதேனும் 5 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.** 5 X 3 = 15

51. இயற்கை மற்றும் செயற்கை காந்தங்களை வேறுபடுத்துக.
52. தளக்கோணம் மற்றும் திண்மக் கோணத்திற்கு இடையே உள்ள வேறுபாடுகளைத் தருக.
53. ஏதேனும் ஆறு அலோகங்களின் பெயர்களையும், அவற்றின் குறியீடுகளையும் எழுதுக.
54. அமிலங்கள் மற்றும் காரங்களுக்கு இடையேயான ஒற்றுமைகள் யாவை?
55. தமிழ்நாட்டில் காற்றாலைகளைப் பயன்படுத்தி காற்றாற்றல் உற்பத்தி செய்யப்படும் இடங்களை எழுதுக.
56. வடிவத்தின் அடிப்படையில் நான்கு வகையான பாக்டீரியாக்களின் பெயர்களை எழுதுக.
57. அ) அழிந்து போன உயிரினங்களுக்கு சில எடுத்துக்காட்டுகள் தருக.
    ஆ) அழியும் தருவாயில் உள்ள இரண்டு விலங்குகளின் பெயர்களைக் கூறுக.
58. தசைநாண் மற்றும் தசைநார் ஆகியவற்றை வேறுபடுத்துக.

**VII ஏதேனும் 5 வினாக்களுக்கு விரிவாக விடையளி.** 5 X 5 = 25

59. அடிப்படை அளவுகளை அவற்றின் அலகுகளுடன் பட்டியலிடுக.
60. காந்தத்தின் அன்றாட வாழ்வியல் பயன்களைப் பட்டியலிடுக.
61. அமிலங்களின் பயன்கள் யாவை?
62. உலோகங்களுக்கும் அலோகங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை அட்டவணைபடுத்துக.
63. அடிக்கோடிடப்பட்டுள்ள தனிமங்களின் இணை திறனைக் காண்க.
    a) <u>Na</u>Cl b) $\underline{C}O_2$ c) <u>Al</u> $(PO_4)$ d) <u>Ba</u> $(NO_3)_2$ e) $\underline{Ca}Cl_2$
64. பாக்டீரியா மற்றும் அதன் அமைப்பினை பற்றி சிறு குறிப்பு எழுதுக.
65. மூட்டுகளின் வகைகளைக் கூறுக. ஒவ்வொரு வகைகளுக்கும் ஒரு எடுத்துக்காட்டு தருக.
66. நீர்பாசன முறைகளை பற்றி விளக்குக.



www.freetnbooks.com | FREETNBOOKS